1974 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசுக்கு ஒரே ஒரு தோட்டம் தான் இருக்கிறது. ஆனால் அங்கிருந்து இப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. குறைபாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தொழில் சட்டங்களை சரிவர அமுல்நடத்துவது ஆங்காங்கே இருக்கின்ற பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்களைச் சேர்ந்தது. அம்மாதிரி ஆஃபீசர் கன்னியா குமரி மாவட்டத்தில் இல்லை. அதனால் அங்குள்ள தொழிலாளர் களுக்கு அரசு அளிக்கும் பயன்கள் சரியாகக் கிடைக்கவும், சட்டம் ஒழுங்காக அமுல் நடத்தப்படவும் வழியில்லாமல் இருக்கிறது. அதை நிவர்த்திப்பதற்கு கன்னியாகுமரிக்கு ஒரு தனி அதிகாரியை நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்குமானால் அதைப்பற்றி அரசு ஆலோசனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

Winch for Thirukkalikundram temple

*349 Q—THIRU N.K. PALANISWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to provide a winch for Thirukkalikundram temple; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மற்றும் (இ) ஆம். இதற்கான நிதி வசதி திருக்கோயிலில் இல்லாததால், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. வாரியத்தின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது? இந்தமாதிரியான காரியங் களுக்கு செலவு செய்வதற்கு மொத்தமாக எச்.ஆர். அண்ட் சி.இ.-யில் ஒரு ஃபண்டு இருக்கிறதே அந்த நிதியிலிருந்து செலவு செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அதில் எவ்வளவு தொகை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதற்கு எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. ஆனால் திருக்கோயில் பணிகளுக்கு அந்தந்த கோயில் நிதியிலிருந்துதான் செலவு செய்யவேண்டுமென்று இருப்பதால் திருக்கழுக்குன்றம் கோயிலில் இதற்குப் போதுமான நிதிவசதி இல்லாததால் சுற்றுலா வளர்ச்சி வாரியத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் இந்த யோசனையை சொன்னது. அவர்களிடமே இந்தப் பணியை ஒப்படைக்கலாமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. பதில் வந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பழனியில் இம்மாதிரியான ஒரு 'விஞ்ச்' இருக்கிறது. அதைவிட உயரமான மலையில் திருக்கழுக்குன்றம் கோயில் இருக்கிறது. அதனால் வயோதிகர்களும் மற்றவர்களும் மேலே போக மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கனவே இந்த 'விஞ்ச்' போட முடிவு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆண்டிலாவது அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மலைக் கோயில் திருக்கழுக்குன்றத்தில் மட்டுமல்ல ; திருச்சி மலைக்கோயில், திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் கோயில், சோழிங்கர்—நாசிம்மசாமி, கோவை—மருதமலை ஆகிய இடங்களிலும் 'விஞ்ச்' அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த கேட்கப் பட்டிருக்கிறது. அவர்கள் முடிவைப்பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Theft of idols from Perumal temple

* 350 *Q.*—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a number of idols belonging to the Perumal Temple at Konthagai near Madurai have been reported stolen around the 23rd July, 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மற்றும் (இ) ஒரு விஷ்ணு சிலையும். இரண்டு அம்மன் (தாயார்) சிலைகளும் களவு போயின. இவை மீட்கப்பட்டு, தற்போது சிவகங்கை குற்றவியல் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளன. குற்றவாளிகள் கைது